பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 113 நாள்: 19.08.2016

**யு.பி.எஸ்.சி. போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்பு துவக்க நிகழ்ச்சி மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது !!**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் தலைமையில் இன்று (19.08.2016) செனாய் நகர் அம்மா அரங்கத்தில் யு.பி.எஸ்.சி. போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்பின் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை மாநகரில் படித்த ஏழை எளிய பட்டதாரி இளைஞர்கள், மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு கருதி பல துறைகளைச் சார்ந்த கல்வியையும் UPSC (IAS,IPS), போட்டித் தேர்வு போன்ற படிப்புகள் மற்றும் அகில இந்திய/மாநில அளவிலான பல வேலை வாய்ப்புகளுக்கான உயர்கல்விக்கான போட்டித் தேர்வுகள் எழுதிடவும், பட்டம் பெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களின் தேவைக்கேற்ப இப்பயிற்சியானது கடந்த 3 ஆண்டுகளாக கல்வித்துறையின் மூலமாக சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து, இத்திட்டத்தினை இக்கல்வியாண்டிலும் (2016–17) தொடர்ந்து செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு, இப்பயிற்சிக்கான தொடக்க வகுப்பு செனாய் நகர், அம்மா அரங்கில் இன்று முதல் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், திரு.முகமது, இ.வ.ப. (சுங்கத்துறை), மண்டலக்குழுத்தலைவர்கள் திரு.எல்.ஐ.சி. மாணிக்கம், திரு.ஏ.இ.வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி